தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
ஆடி 19, விய–திருவள்ளுவர் ஆண்டு 2037
2006 ஆகஸ்ட் 4, வெள்ளிக்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. இரா. ஆவுடையப்பன்** அவர்கள் தலைமையில் காலை 9–30 மணியளவில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"கேடில் விழுச்செல்வங் கல்வி யொருவற்கு
மாடல்ல மற்றை யவை"

கல்வி ஒன்றே அழிவற்ற செல்வமாகும். அதற்கொப்பான சிறந்த செல்வம் வேறு எதுவும் இல்லை.

1. வினாக்கள்–விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்–விடைகள். வினா வரிசை எண் 1. திரு. துரை சந்திரசேகரன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

1—

கட்டட வசதி

***2—திரு. துரை சந்திரசேகரன்:**

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டம், திருக்காட்டுப்பள்ளி தீயணைப்பு நிலையத்துக்குப் புதிய கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை, திருக்காட்டுப்பள்ளியில் தீயணைப்பு நிலையம் கட்டுவது அரசின் பரிசீலனையிலே உள்ளது.

[2006 ஆகஸ்ட் 4

திரு. துரை சந்திரசேகரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பரிசீலனையில் உள்ளது என்றால், எந்த அளவில் பரிசீலனையில் உள்ளது?*

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: *தலைவர் அவர்களே, இப்பொழுது அந்த நிலையம் கட்டுவதற்காகத் தேர்வு செய்யப்பட்ட இடம், பழமானேரி கிராமத்தில் இருக்கின்றது. அது பொதுப் பணித் துறைக்குச் சொந்தமாக இருக்கின்ற காரணத்தால், பொதுப் பணித் துறையோடு தொடர்பு கொண்டு, அந்த இடத்தைப் பெற்று அங்கே நிலையம் அமைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அர. சக்கரபாணி.*

திரு. அர. சக்கரபாணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஐந்தாண்டு ஆட்சிக் காலத்தில், தமிழ்நாட்டில் எத்தனை தீயணைப்பு நிலையங்கள் தொடங்கப்பட்டன? 1996 முதல் 2001 வரை, மாண்புமிகு தமிழக முதல்வர் தலைவர் கலைஞர் ஆட்சிக் காலத்திலே, எத்தனை தீயணைப்பு நிலையங்கள் தமிழ்நாட்டிலே தொடங்கப்பட்டன என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகின்றேன்.*

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே தி.மு.கழக ஆட்சியில் 57 தீயணைப்பு நிலையங்கள் அமைக்கப்பட்டன. கடந்த ஐந்தாண்டுக் கால ஆட்சியில் 4 தீயணைப்பு நிலையங்கள் அமைக்கப்பட்டன.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. மூர்த்தி.*

திரு. டி. மூர்த்தி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு தீயணைப்பு நிலையம் தொடங்க எவ்வளவு செலவு ஏற்படும் என்பதனைத் தெரிய விரும்புகின்றேன்.*

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தீயணைப்பு நிலையத்தினுடைய பரப்பளவு, கட்டட அளவு இவற்றைப் பொறுத்து, அது பெரிய நிலையமா,*

2006 ஆகஸ்ட் 4]

நடுத்தர நிலையமா என்பதையெல்லாம் எண்ணிப் பார்த்து, அதற்கேற்ப செலவழிக்கப்படுகிறது. எனவே, குறிப்பாக ஒரு தீயணைப்பு நிலையத்திற்கு இவ்வளவு ரூபாய் என்று சொல்வதற்கில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. பிச்சாண்டி.

திரு. கு. பிச்சாண்டி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் மொத்தம் எத்தனை தீயணைப்பு நிலையங்கள் உள்ளன? அவற்றிற்குச் சொந்தக் கட்டடங்கள் எத்தனை உள்ளன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் தற்போது 282 தீயணைப்பு மற்றும் ஒரு மீட்புப் பணி நிலையங்கள் இருக்கின்றன. இவற்றிலே சொந்தக் கட்டடத்திலே உள்ளவை 161. ஓரளவு நிரந்தரமாக் இருப்பவை 30. வாடகைக் கட்டத்திலே இருப்பவை 91.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்.

டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தீயணைப்புத் துறையில் இரண்டு பணிகள் முக்கியமானவை. ஒன்று தீயை அணைப்பது; இன்னொன்று மீட்புப் பணி. இந்த இரண்டு பணிகளுக்காக, தீயணைப்புத் துறையால் வாங்கப்பட்ட வாகனங்களின் எண்ணிக்கை எத்தனை? மீண்டும் வாகனங்கள் வாங்குவதற்கு ஏதேனும் உத்தேசம் அரசிடம் உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன். அதேமாதிரி, அடுக்குமாடிக் கட்டடங்களிலே தீ பரவும்போது அதற்காக சிறப்பு வாகனங்கள் வாங்கப்படுமா என்பதையும் தங்கள் மூலமாக அறிய விரும்புகின்றேன்.

முற்பகல் 9–35

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, இவை இரண்டும் தனித் தனியானவை. எனவே, தனிக் கேள்வி போடவும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 2, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சாமி, மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.